முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!!

தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

குரோதி வருடம் சித்திரை மாதம் 08 திகதி முதல்

குரோதி வருடம் சித்திரை மாதம் 15 திகதி வரை

(21.04.2024 ஞாயிறு முதல் 28.04.2024 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஞானயுகம் படைக்கவந்த அரங்கனே
ஞானபண்டிதனார் அவதாரமாக வந்த
ஞானதேசிகனே உமை போற்றி
ஞாலமதில் அகத்திய மகரிஷி யானும்
2. யானும் அரங்கமகா ஞானிகேட்க
இந்தியா தமிழகத்தின் வருங்கால பலனை
ஞானம்பட குரோதி தகர்திங்களில்
நல்அட்டம திகதிமேல் மூவை திகதிவரை
3. வரைநடக்கும் வார நிகழ்வாக
வருங்கால பலன்குறித்த ஆசியுரைப்பேன்
திரைமறைவில் தேர்தல் களமென
தேசமதில் பலகுளறுபடிகள் அணுகி
4. அணுகியே தலைமைகள் என்கின்ற
அமைப்புகள் அத்தனை தானும்
ஞானமிலா மக்களை வஞ்சிக்கும்படி
நடந்துமே பணபலத்தால் வெற்றிதேடி
5. தேடியே நீதி நெறிகளை மறந்து
திடமாக சாதி இனமத வலிமை
நாடியே சமத்துவநிலை மறந்து
நன்மைதரா இலவசம் காட்டி

6. காட்டியே பகட்டான வாக்குறுதிகளை
கட்டவிழ்த்து விட்டு களம் காணும்
வாட்டமான நாட்டை வதைக்கின்ற
வகையிலா இந்த போக்குகள் மாற
7. மாறவே இந்தியா தமிழகத்தின்
மாண்புகள் என்றும் காக்கப்பட
கூறுவேன் ஆன்மீக ஞானவழிகாட்டும்
குருவரங்கன் தருமநெறிகளை ஏற்று
8. ஏற்றுமே தேசநலம் காக்க விரும்பும்
எல்லாத் தலைமைகளும் தேடிவந்து
உற்றதொரு ஆசிதீட்சை ஏற்று
உயர்வான சன்மார்க்க வழிமுறைகளை
9. வழிமுறைகளை பின்பற்றி வர
வணங்கி மக்கள்நலம் வேண்டி
தெளிவுடன் சேவை ஆற்றுகின்ற
திடமான ஞானத்தலைமை உருவாகி
10. உருவாகி நல்லமாற்றம் தன்னை
உலகே வியக்க இந்தியா தமிழகம் கண்டடையும்
குருவாகி அரங்கன் காட்டும் வழியே
குறைவின்றி மக்களை தேற்றும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

குரோதி வருடம் சித்திரை மாதம் 08ம் நாள் 21.04.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் குரோதி வருடம் சித்திரை மாதம் 15ம் நாள் 28.04.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

உலகினில் கலியுகத் துன்பங்களில் இருந்து மக்களை மீட்டு ஞானயுகம் படைப்பதற்காகவே ஞானபண்டிதனார் முருகப்பெருமானின் சக்தி வடிவமாக அவதாரமாக வந்துதித்த ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியே உம்மை போற்றியே இவ்வுலகினில் அகத்திய மகரிஷி யானும் ஆறுமுக அரங்கமகா ஞானி கேட்க இந்தியா தமிழகத்திலே குரோதி வருடம் சித்திரை மாதம் 08நாள்

21.04.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் குரோதி வருடம் சித்திரை மாதம் 15ம் நாள் 28.04.2024 ஞாயிற்றுக்கிழமை வரை நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

தேர்தல் களத்திலே வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்திலே திரைமறைவில் பலவிதமான குளறுபடிகளை செய்வார்கள், அரசியல் கட்சிகள் மக்களை ஏமாற்றும் விதமாக நடந்து கொள்ளும், பணபலத்தால் வெற்றி அடைய எண்ணுவார்கள், நீதி நெறிகளை மறந்து சாதியின் வலிமையையும், இன வலிமையையும், மத வலிமையையும் நாடுவார்கள், சமத்துவ நிலை மறந்து போவர் மக்களிடம் வாக்கு பெற வேண்டும் என்பதற்காக மக்களுக்கு நன்மை பயக்காத இலவசங்களை தருகிறேன் என அறிவிப்பார்கள், வாக்குறுதிகளை கட்டவிழ்த்து விடுவார்கள்.

நாட்டிற்கு நன்மை தராத இந்தவித போக்குகள் மாற வேண்டுமாயின் மக்களுக்கு நன்மையே தரும் வள்ளல் பெருமானாரின் தயவு நெறிகளை, உலகோர்க்கு ஆன்மீக ஞானவழி காட்டும் குரு அரங்கமகா தேசிகர் கூறும் தூய தரும நெறிகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமப்பா.

நாட்டின் நலம் விரும்புவோர் குரு அரங்க மகானிடத்து ஆசி தீட்சை ஏற்று உயர்வான சன்மார்க்க வழிமுறைகளை பின்பற்றி நடந்து வர வணங்கி செயல்பட்டு வந்தால் மக்களுக்கு சேவையாற்றும் நல்ல உள்ளம் கொண்ட திடமான ஞானத்தலைமை உருவாகி இந்தியா பல நல்ல மாற்றங்களை கண்டடைந்து உலகமே வியக்குமாறு முன்னேற்றம் அடையும், மக்களை உயர்த்தும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–